**கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

**மீள்திறனை மேம்படுத்துவதற்கும் பங்கேற்பு மீட்புக்கான வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்குமான துறைசார் அபிவிருத்தித் திட்டம்**

# திட்டப் பணியாளர்களை ஆட்சேர்த்தல்

"மீள்திறனை மேம்படுத்துவதற்கும் பங்கேற்பு மீட்புக்கான வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்குமான துறைசார் அபிவிருத்தித் திட்டம்" (PROIR-SDP) என்பது இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஆகியவற்றின் கூட்டு நிதியுதவியுடன், கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒரு திட்டமாகும். 100 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்தச் செலவைக் கொண்ட இத்திட்டம் இலங்கையிலுள்ள வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினருக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளைக் கொண்ட இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகளின் மீள்திறனையும் நல்வாழ்வையும் வலுப்படுத்துவதாகும்.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு (PMU) பின்வரும் (01 மற்றும் 25) ஒப்பந்த அடிப்படையிலான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் 2026 மார்ச் 28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

| இல. | சம்பளப் பிரிவு | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | A | திட்டப் பணிப்பாளர் | 01 |
| 2 | C | பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ நிபுணர் | 01 |
| 3 | C | கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் | 01 |
| 4 | C1 | நிதி முகாமைத்துவ நிபுணர் | 01 |
| 5 | D | அளவுக் கணிப்பீட்டாளர் | 01 |
| 6 | F | தொழில்நுட்ப அதிகாரி (I) | 02 |

அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்

விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 02/2026ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொதுவான நிபந்தனைகள்:

- விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் அறுபத்து இரண்டு (62) வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.
- நன்கொடையாளர் நிதியளிப்புத் திட்டத்தில் இதனையொத்த அல்லது உயர்ந்த கொள்ளளவில் வேலை அனுபவம்
- பெறுகை/கணக்கியல், வர்த்தகம் மற்றும் மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், வாழ்வாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி அல்லது முதியோர் பராமரிப்பு ஆகிய துறைகளில் விரிவான அறிவைப் பெற்றிருப்பது ஒரு குறிப்பிடத்தக்க சாதகமாகக் கருதப்படும்.
- ஆங்கிலத்தில் புலமை, சிறந்த கணனி ஆற்றல் மற்றும் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்த ஆழ்ந்த பரிச்சியம் தேவையாகும்.
- தொடர்புடைய துறைகளில் உள்ள தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாகும்.
- தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் நேர்காணலுக்காக அழைக்கப்படுவர் என்பதுடன் மேற்கூறிய ஆட்சேர்ப்பு தொடர்பில் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் மற்றும் உறுதியானதுமாகும்.
- ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும் தங்களது சுய விபரங்கள் (CV) சகிதம் உறவினரல்லாத இரு சான்று பகர்வோர் சகிதம் மற்றும் சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 2026 நவம்பர் 01ஆம் அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பவும் அல்லது **mssplan@yahoo.com** எனும் முகவரிக்கு மின்னஞ்சலிடவும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க / அரசு சார்ந்த சேவைகளில் இருந்தால் அவர்களின் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

மேலதிக தகவல்கள் மற்றும் குறிப்பு விதிமுறைகளுக்கு தயவு செய்து https://www.mrds.gov.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்:

**செயலாளர்,**
**கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு,**
**01ஆம் மாடி, 11ஆம் கட்டம்,**
**செத்சிறிபாய,**
**பத்தரமுல்ல.**